**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர், திசம்பர் – 2014**

**D031 இலக்கணம் – 4 (யாப்பு, அணி)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. நாலசைச் சீரின் வேறு பெயர் என்ன?
2. 'காய்' என்னும் வாய்பாட்டில் முடியும் சீர்கள் எத்தனை?
3. சீர்கள் மூன்றனால் நிரம்பி அமையும் ஓரடிக்கு என்ன பெயர்?
4. ஒரு செய்யுளில் உள்ள அடிதோறும் இறுதியில் ஒன்றி வரும் தொடையின் பெயர் என்ன?
5. ஆசிரியப்பாவுக்கு உரிய ஓசை எது?
6. வஞ்சிப்பா எத்தனை வகைப்படும்?
7. கலித்தொகை எவ்வகைப் பாவால் இயற்றப்பட்ட நூல்?
8. யாப்பருங்கலக் காரிகை குறிப்பிடும் பொருள்கோள்கள் மொத்தம் எத்தனை?
9. பொருளால் தொகுக்கப்பட்ட தொகைநிலைச் செய்யுள் நூல் ஒன்றைக் கூறுக.
10. தமிழில் 'கம்ப நாடகம்' எனச் சுட்டப்பெறும் காப்பியம் எது?

11. செய்யுளில் இடம்பெறும் இருவகை இன்பங்கள் யாவை?
12. 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி, பகவன் முதற்றே உலகு' - இத்திருக்குறளில் அமைந்துள்ள அணி எது?
13. பின்வரும் நிலையணி எத்தனை வகைப்படும்?
14. அதிசய அணியை வேறு எப்பெயரால் குறிப்பிடுவர்?
15. சுவை அணி எத்தனை வகைப்படும்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. அசைக்கு உறுப்பாகும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?
2. மூவசைச்சீர் எத்தனை வகைப்படும்? அவற்றின் வாய்பாடுகளைக் கூறுக.
3. நேரிசை ஆசிரியப்பாவின் இலக்கணத்தை ஒரு சான்று தந்து விளக்குக.
4. வஞ்சிப்பாவின் பொது இலக்கணம் தருக.
5. கௌட நெறி கூறும் பொருள் இன்பத்தை விளக்குக.
6. தன்மையணியின் இலக்கணத்தை ஒரு சான்று தந்து விளக்குக.
7. திருக்குறளில் பிறிதுமொழிதல் அணி பயில்வதைச் சான்று கொண்டு விளக்குக.
8. 'பாவிகம் என்பது காப்பியப் பண்பே' – இந்நூற்பாவை விளக்குக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) தளையின் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) எண்வகைத் தொடைகளைச் சான்று காட்டி விளக்குக.

2. (அ) வெண்பாவின் பொது இலக்கணம் கூறி, அதன் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) தொகைநிலைச் செய்யுள் பற்றித் தண்டியலங்காரம் பொதுவணியியலில் கூறப்படும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

3. (அ) தற்குறிப்பேற்ற அணியின் இலக்கணத்தைக் கூறி அதன் வகைகளைச் சான்றுப் பாடல்கள் தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) இலேச அணியின் இலக்கணத்தையும், அதன்பால் படும் அணிகளின் இலக்கணத்தையும் சான்றுகள் காட்டி விளக்குக.